www.Padasalai.Net
www.CBSEtips.in

TsBT

தென்காசி மாவட்டம்

முதல் இடைப்பருவத் தேர்வு - 2023

08-08-2023

வகுப்பு 8

தமிழ்

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 50

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5×1=5

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .....
அ) வைப்பு ஆ) கடல்
இ) பரவை ஈ) ஆழி

2) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் .....
அ) பாரதிதாசன் ஆ) தந்தைபெரியார்
இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்.

3) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் .....
அ) இ, ஈ ஆ) உ, ஊ
இ) எ, ஏ ஈ) அ, ஆ

4) 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .....
அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை
இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை

5) பின்வருவனவற்றுள் ஏவல்வினைமுற்றுச் சொல் .....
அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 3×1=3

6) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ..... என அழைக்கப்பட்டன.

7) முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ..... யும் ஓட்டி விடும்.

8) விலங்கொடு ..... அனையார் .....
கற்றாரோடு ஏனை யவர்.

இ) அடிமாறாமல் எழுதுக. 3+2=5

9) 'வாழ்க நிரந்தரம்' எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

10) 'கொளல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

ஈ) எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. 6×2=12

11) உலகம் எவற்றால் ஆனது?

12) ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?

13) கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

14) வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

15) நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

16) பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?

17) மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

18) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

உ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை எழுதுக. 2×4=8

19) புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்படும் கருத்துகள் யாவை?

20) நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

21) எழுத்துகளின் பிறப்பு குறித்து எழுதுக.

ஊ) விரிவான விடையளிக்க. 1×5=5

22) அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' - கதையைச் சுருக்கி எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

எ) கட்டுரை வடிவில் விடையளிக்க. **1×6=6**

23) அ) நான் விரும்பும் கவிஞர் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

ஏ) பின்வரும் சிந்தனை வினாவிற்கு விடை எழுதுக. **1×6=6**

24) அ) இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்பட்டாமல் தவிர்க்கச் செய்யவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

(அல்லது)

ஆ) தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com